திரு. காசி விஸ்வநாதன், அவர் தேர்வாணையத்திற்குச் செல்கின்ற வரையில்—அவரை அங்கேயும் நான்தான் அனுப்பி வைத்தேன்—செல்கின்ற வரையில் வன்னியராக, என்னுடைய செயலாளராக இருந்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதையெல்லாம் நண்பர் திரு. மணி அவர்கள் மறந்துவிடக் கூடாது.

பிற்பகல் *12–50*

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற நிலைமையைச் சொல்கின்றேன். இ.பி.ஆர். இருந்ததை நான் மறுக்கவில்லை. திரு. காசி விஸ்வநாதன் அவர்களை முதலமைச்சரின் செயலாளராகப் போடவேண்டுமென்று மருத்துவர் அய்யா அவர்கள் உங்களிடம் கேட்டார்கள்; நீங்கள் போட்டீர்கள். அதையெல்லாம் மறுக்கவில்லை. திரு. காசி விஸ்வநாதன் இருந்தது, திரு. வைத்தியலிங்கம் இருந்தது, திரு. இ.பி.ஆர். இருந்தது எல்லாம் நான் மறுக்கவில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் சொல்கிறேன். இன்றைக்கு என்ன நிலைமை என்று பார்த்தீர்கள் என்று சொன்னால், இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள்—I.A.S.—தமிழ்நாட்டில் மொத்தம் *325* பேர்கள்; அவர்களில் வன்னியர்கள் வெறும் *9* பேர். அதேபோல இந்தியக் காவல் பணி அதிகாரிகள்—I.P.S.—*162* பேர்கள்; அதில் வன்னியர்கள் வெறும் *6* பேர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I.A.S. அதிகாரிகளைத் தேர்வு செய்வது U.P.S.C. இது ஏதோ தமிழ்நாடு அரசாங்கம் நியமனம் செய்வதல்ல. U.P.S.C.–யிலே தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே I.A.S. அதிகாரிகளாக வருகிறார்கள். இதற்குத் தமிழக அரசாங்கம் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் மணி அவர்களிடத்திலே ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன். நானும் தயாராக வந்திருக்கிறேன். (சிரிப்பு) *1988–1989* ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டிற்கு முன்பு வன்னியர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலே கிடைத்த இடங்கள் *26*. *1989–1990* ஆம் ஆண்டு நான் பிறப்பித்த *20* சதவிகித இட ஒதுக்கீட்டிற்குப் பின்பு வன்னியர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலே கிடைத்த இடங்கள் *74*.

(மேசையைத் தட்டும் ஒலி) 2008–2009 ஆம் ஆண்டு வன்னியர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலே கிடைத்த இடங்கள் 165. 2008–2009 ஆம் ஆண்டில் கொங்கு வேளாளர்களுக்கு மருத்துவக் கல்லூரியிலே கிடைத்த இடங்கள் 150. 1988–1989 ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டிற்கு முன்பு, இன்ஜினியரிங் காலேஜில் வன்னியர்களுக்குக் கிடைத்த இடங்கள் 109. 1989–1990 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டிற்குப் பின்பு இன்ஜினியரிங் கல்லூரியில் வன்னியர்களுக்குக் கிடைத்த இடங்கள், 1989–1990–லே 292. (மேசையைத் தட்டும் ஒலி)

மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகித இட ஒதுக்கீடு கிடைத்த பிறகு 2006 ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரிகளிலே கிடைத்த இடங்கள் 8,883. இதிலே வன்னியர்களுக்கு மாத்திரம் கிடைத்த இடங்கள் 4,229. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய டாக்டர் அய்யா அவர்கள் இசை வேளாளர்களுக்குத்தான் நிறைய கிடைத்திருக்கிறது என்று ஒரு திருமணத்திலே பேசியதாக நான் கேள்விப்பட்டேன். பத்திரிகையிலே வந்ததாகச் சொன்னார்கள். ஆனால், அந்தத் திருமணத்திலே மாப்பிள்ளை யார், பெண் யார், தெரியுமா? அவர் பேசிய திருமணத்திலே மாப்பிள்ளை அய்யப்பன், கோவை அரசுத் தொழில்நுட்பக் கல்லூரியில் நியமிக்கப்பட்டவர், இந்த ஆட்சியில்; வன்னியர் அவர். (மேசையைத் தட்டும் ஒலி) வேலூர் பெரியார் அரசுப் பொறியியல் கல்லூரியில் மணப் பெண் ரமா நியமிக்கப்பட்டார். மணமக்கள் இரண்டு பேருமே எங்களால் நியமிக்கப்பட்டவர்கள். அங்கேயிருந்துதான் நம்முடைய டாக்டர் அய்யா அவர்கள் தி.மு.க.வை எதிர்த்து வீர முழக்கமிட்டிருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள். நேற்றுகூட அந்தத் திருமண விழாவிலே பேசிவிட்டு 'அதைச் செய்ததை நான் பாராட்டுகின்றேன், நன்றி செலுத்துகின்றேன்' என்று சொல்லியிருக்கிறார். 'தினத்தந்தி' பத்திரிகையில் வந்திருக்கிறது. நன்றி சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். 'தினத்தந்தி'யைப் பாருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம் போன்ற மாவட்டங்களில் இத்தகைய வறிய நிலையை, இன்றைக்கும் காண முடிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மணி அவர்கள் ஒப்புக்கொள்வார்களேயானால், இந்த அவையும் ஒப்புக்கொள்ளுமேயானால், "தி.மு.க. ஆட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு, நன்மைகள் உண்டா, இல்லையா?" என்ற தலைப்பில் ஒரு நாள் இந்த அவையில் விவாதம் வைத்துக்கெள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஆதாரமாகக் கடிதங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. அய்யா டாக்டர் ராமதாஸ் அவர்கள் எழுதிய நன்றிக் கடிதங்கள் என்னிடத்திலே குவியல் குவியலாக இருக்கின்றன. அவரை நியமித்ததற்கு நன்றி, இவரை நியமித்ததற்கு நன்றி என்றெல்லாம் எழுதியிருக்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல; தன்னுடைய சமுதாயத்தைச் சேர்ந்த ராமசாமி என்பவரையே நியமிக்க வேண்டும் என்று டாக்டர் இராமதாஸ் அவர்கள் எழுதிய கடிதம் எல்லாம் இருக்கிறது. இப்படி அநேக ஆதாரப்பூர்வமான விஷயங்களை வைத்துக்கொண்டு, விவாதம் நடத்த ஒரு நாள், திரு. மணி அவர்களும் தேர்ந்தெடுக்கலாம்.

பிற்பகல் 1–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, தற்போது நேரம் பிற்பகல் 1–00, 1–02 க்குள் உரையை முடித்துவிடுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொடர்ந்து எவ்வளவு பாதிப்பு என்று பட்டியல் சொல்கிறேன், விவாதம் வைத்துக்கொள்வோம். இதிலே தலைமைச் செயலகத்தில் அரசுச் செயலாளர்கள் 36 பேர்; ஒருவர்கூட வன்னியர் இல்லை. கூடுதல் செயலாளர்கள் 15 பேர்; ஒருவரும் வன்னியர் இல்லை. இணைச் செயலாளர்கள் 35 பேர், ஒருவரும் வன்னியர் இல்லை. துணைச் செயலாளர்கள் 97 பேர், ஒருவரும் வன்னியர் இல்லை. சார்புச் செயலாளர்கள் 231 பேர், அவர்களில் 7 பேர்தான் வன்னியர்; பிரிவு அலுவலர்கள் 650 பேர், அவர்களிலே 25 பேர்தான் வன்னியர்; உதவி பிரிவு அலுவலர்கள் . . .

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தற்போது அமைச்சர்கள் 31 பேர்; அவர்களில் 3 பேர் வன்னியர்கள்! (சிரிப்பு)